# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 3063 of 2020

Deposition of witness for

DW1

Name : Tmt.R. Saratha

Husband's Name : Rajendran

Age : 61 Years

Address : No. 14/43, 11th Street, Ashok Nagar, Chennai - 83.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day January of 2026 .

---

**30.01.2026**

**DW1** குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

நான் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்து அவர் தாக்கல் செய்யாமல் விட்டு விட்டதாக சொன்ன ஆவணங்கள் என்னென்ன என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் என்னுடைய மாமியார் பட்டாவை என்னிடம் கொடுத்து அதில் உள்ள சொத்து என்னுடையது தான் என்று சொன்னார்கள். அந்த பட்டாவை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் இல்லை. மரியாள் வீரப்பனுக்கு இரண்டு மகள்கள் மூன்று மகன்கள் உள்ளனர். அவர்களுடைய பெயர் முறையே கஜேந்திரன், மகேந்திரன், ராஜேந்திரன், மகாதேவி மற்றும் தேவேந்திரி. நான் குடியிருக்கின்ற இடம் மூதாதையருக்கு சம்பந்தப்பட்ட சொத்து என்று சொல்லி இருக்கின்றேன் ஆனால் மேற்படி சொத்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றுச் சொன்னால் அந்த சொத்து எனக்காக கொடுக்கப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி சொத்தை என்னுடைய மாமியார் எனக்கு கொடுத்தார்கள்

என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையாவது தாக்கல் செய்து இருக்கின்றேனா என்றால் இல்லை. தாவா சொத்தை குடிசை மாற்று வாரியம் என்னுடைய மாமியார் பெயரில் ஒதுக்கியதற்கான ஒதுக்கீட்டு உத்தரவை தாக்கல் செய்திருக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பி.த.சா.ஆ.11 –ல் மரியாள் மற்றும் ராஜேந்திரன் ஆகிய இருவருடைய பெயர்கள் மட்டுமே உள்ளது என்றும். மேற்படி வாரிசுதாரர் சான்றிதழ் என்னால் தவறாக பெறப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய மாமியாருக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சொத்தை எந்த மாதம் வருடத்தில் ஒதுக்கீடு செய்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து என்னுடைய மாமியார் பெயரில் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்திருப்பதாலும் மேற்படி சொத்து சம்பந்தமாக என்னுடைய மாமியாரும் மாமனாரும் எந்த ஆவணங்களும் எழுதி வைக்காமலே இறந்துவிட்ட காரணத்தினாலும் அவர்களுடைய ஐந்து குழந்தைகளுக்கும் மேற்படிச் சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய மாமியார் மேற்படி ஒதுக்கீட்டு ஆவணத்தை என்னிடம் கொடுத்து எனக்காக என்று மட்டுமே சொன்னார்கள், அதன் அடிப்படையில் நான் கடந்த 40 வருடங்களாக மேற்படி சொத்தில் குடியிருந்து வருவதாக சாட்சி கூறுகின்றார். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் ஒதுக்கீட்டின் அடிப்படையில் தாவா சொத்தை பதிவு செய்து கொடுத்ததற்கான விற்பனை பத்திரத்தை பெற்றிருக்கின்றேன் என்றால் இல்லை. இந்த தாவாவை தாக்கல் செய்திருக்கும் மகாதேவி மற்றும் தேவேந்திரன் எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் என்னுடைய நாத்தனார்கள். வாதிகள் இருவரும் இந்த தாவாவை தாவா சொத்தில் இருக்கின்ற வீட்டை விற்பனை செய்வதற்காக தாக்கல் செய்திருக்கின்றார்கள். அது மகேந்திரன் என்பவருடைய தூண்டுதலின் பெயரிலேயே தாக்கல் செய்திருப்பதாக சாட்சி கூறுகின்றார். வாதிகள் இந்த வழக்கை கஜேந்திரன், மகேந்திரன் மற்றும் என்னுடைய கணவருடைய வாரிசுகள் என்ற முறையில் என் மீது என்னுடைய குழந்தைகள் மேலும் தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால் கஜேந்திரன் மற்றும் மகேந்திரன் பேரில் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறுகின்றார். மேற்படி வீடு எங்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட வீடு என்றும் சாட்சி சொல்லுகின்றார். வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்று சொன்னால், அவர்கள் கொடுக்கவில்லை என்னுடைய மைத்துனர் கொடுத்தார் என்று சொல்லுகின்றார். வா.சா.ஆ.1 என்னுடைய மாமியார்

பெயரில் தாவா சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான உத்தரவு என்று சொன்னால் சரிதான். என்னுடைய மாமியார் 23.12.2010–ல் இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய மாமனார் 24.10.1981– இல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இரண்டு ஆவணங்களும் சான்றாவணம் இரண்டு மற்றும் மூன்றாக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.4 என்னுடைய மாமனார் மற்றும் மாமியாரின் வாரிசுதாரர் சான்று என்று சொன்னால் சரிதான். ஆனால் அதில் தன்னுடைய கணவர் பெயர் சேர்க்கவில்லை என்று சாட்சி கூறுகின்றார். வா.சா.ஆ.4– ஆனது 01.09.2016 கொடுக்கப்பட்டார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 என்னுடைய கணவரின் இறப்பு சான்றிதழ் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 –ஐ 1–ம் பிரதிவாதி 25.06.2018 அன்று தாவா சொத்து சம்பந்தமாக கிரைய பத்திரத்தை பதிவு செய்து கொடுக்கக் கோரி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு கொடுக்கப்பட்ட கடிதம் என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதி குடிசை மாற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையின் பாதி தொகையை நான் மேற்படிச்சொத்தில் குடியிருந்து வருவதால் என்னிடமிருந்து பெற்று தான் செலுத்தியதாக சாட்சி கூறுகின்றார். வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் என் மூலமாக ராஜேந்திரனுக்கு பிறந்தவர்களுக்கு மட்டுமே உரிமை, மற்றவர்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் 2/5 பாகம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்திருக்கின்றார்கள் அவர்கள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் அது சரியில்லை. என்னுடைய கணவரின் இரண்டாவது மனைவிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

30.01.2026

III Addl. Judge.
III Addl. Court.